உ

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாச வள்ளலார்

என்னும்

சிதம்பரம் இராமலிங்கப்பிள்ளை அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# அருட்பா.

இஃது.

சிதம்பரம்.

பு. வே. சுந்தரம்பிள்ளை கேட்டுக்கொண்டபடி

இவை.

சரவணபுரம்.

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1890

உ

கடவுள் துணை.

இராமலிங்கப்பிள்ளை அவர்கள்

செய்தருளியபாடல்கள்.

சிற்சபையும்பொற்சபையுஞ்சொந்த மெனதாச்சு
தேவர்களுமூவர்களும்பேசுவதென் பேச்சு
இச்சமயவாழ்விலெனக்கென்னவினி பேச்சு
என்பிறப்புத்துன்பமெலாமின்றோடே போச்சு

ஐயரருட்சோதி அரசாட்சியென தாச்சு
ஆரணமுமாகமமும்பேசுவதென் பேச்சு
எய்யுலகவாழ்விலெனக்கென்னவினி யேச்சு
என்பிறவித்துன்பமெலாமின்றோடே போச்சு

ஈசனருளாற்கடலிலேற்றதொரு வோடம்
ஏறிக்கரையேறினேனிருந்ததொரு மாடம்

பீடம்
தேசுறுமம்மாடநடுத்தெய்வமணி தோடம்
தீபவொளிகண்டவுடன்சேர்ந்ததுசங்

நீட்சி
மேருமலையுச்சியில்விளங்குகம்ப சாட்சி
மேவுமதன்மேலுலகில்வீறுமா காட்சி
சேருமதிற்கண்டபலசாட்சிகள்கண் சாட்சி
செப்பலரிதாமிதற்கென்னப்பனருள்

நாடு
துரியமலைமேலுளதோர்ஜோதிவள வீடு
தோன்றுமதிலையர்நடஞ்செய்யுமணி ரோடு
தெரியுமதுகண்டவர்கள்காணிலுயி போடு
செத்தவரெழுவாரென்றுகைத்தாளம்

மீது
சொல்லாளப்பரியசோதிவரை யோது
தூய்துரியப்பதியில்நேயமறை போது
எல்லாஞ்செயவல்லசித்தர்தம்மையுறும் யூது
இறந்தாரெழுவாரென்றுபுறந்தாரை

வாச்சு
சிறபொதுவும்பொற்பொதுவும்நானறிய பேச்சு
சித்தர்களுமுத்தர்களும்பேசுவதென் யேச்சு
இற்பகருமிவ்வுலகிலென்னையினி போச்சு
என்பிறவித்துன்பமெலாமின்றோடே

வலதுசொன்னபேர்களுக்குவந்ததுவாய்த் தாழ்வு
மற்றுநமைச்சேர்ந்தவர்க்கும்வந்ததலைத் தாழ்வு
வலதுபுஜமாடநம்மால்வந்ததருள் தாழ்வு
மற்றுநமைச்சூழ்ந்தவர்க்குவந்ததுநல் வாழ்வு

அம்பலத்திலெங்களையாறியநல் லாட்டம்
அன்பொடுதுதித்தவருக்கானதுசொல் லாட்டம்
வம்புசொன்னபேர்களுக்குவந்ததுமல் லாட்டம்
வந்ததலையாட்டமன்றிவந்ததுமல் லாட்டம்

நாத்திகன்சொல்கின்றவதநாக்குமுடை நாக்கு
நாக்குருசிகொள்ளுவதுநாறியபிண ணாக்கு
சீர்த்திபெறுமம்பலவர்சீர்புகன்ற வாக்கு
செல்வாக்குநல்வாக்குதேவர்திரு வாக்கு

கையறவிலாதுநடுக்கண்புருவப் பூட்டு
கண்டுகளிகொண்டுதிறந்துண்டுநடி நாட்டு
ஐயர்மிகவுய்யும்வகையையர்விளை யாட்டு
ஆடுவதென்றேமறைகள்பாடுவது பாட்டு (௧௧)

## வேறு.

அருட்பெருஞ்சோதியைக் கண்டேனே
ஆனந்ததெள்ளமு துண்டேனே

# அருட்பா.

இருட்பெருமாயையை விண்டேனே
ஈனருறவையும் பிண்டேனே (௨)

திருச்சிற்றம்பலம்.

கைவிடமாட்டேனென் ஊதூது சங்கே
கனகசபையானென் ஊதூது சங்கே
பொய்விடச்செய்தானென் ஊதூது சங்கே
பூசைபலத்ததென் ஊதூது சங்கே

தூக்கந்தொலைத்தானென் ஊதூது சங்கே
துன்பந்தவிர்த்தானென் ஊதூது சங்கே
ஏக்கங்கெடுத்தானென் ஊதூது சங்கே
ஏமசபையானென் ஊதூது சங்கே

பொன்னடிதந்தானென் ஊதூது சங்கே
பொன்னம்பலத்தானென் ஊதூது சங்கே
இன்னலறுத்தானென் ஊதூது சங்கே
என்னுளமர்ந்தானென் ஊதூது சங்கே

அச்சந்தவிர்த்தானென் றாதாது சங்கே
அம்பலவாணனென் றாதாது சங்கே
இச்சையளித்தானென் றாதாது சங்கே
இன்பங்கொடுத்தானென் றாதாது சங்கே

என்னுயிர்காத்தானென் றாதாது சங்கே
இன்பம்பலித்ததென் றாதாது சங்கே
பொன்னுருதந்தானென் றாதாது சங்கே
பொற்சபையப்பனென் றாதாது சங்கே

சிவமாக்கிக்கொண்டானென் றாதாது சங்கே
சிற்றம்பலத்தானென் றாதாது சங்கே
நவநோக்களித்தானென் றாதாது சங்கே
நானவனானேனென் றாதாது சங்கே

நாதமுடியானென் றாதாது சங்கே
ஞானசபையானென் றாதாது சங்கே
பாதயளித்தானென் றாதாது சங்கே
பலித்ததுபூசையென் றாதாது சங்கே

தெள்ளமுதானானென் ஊதூது சங்கே
சிற்சபையப்பனென் ஊதூது சங்கே
உள்ளமுவந்தானென் ஊதூது சங்கே
உள்ளதுரைத்தானென் ஊதூது சங்கே

என்றறிவானானென் ஊதூது சங்கே
எல்லாஞ்செய்வல்லானென் ஊதூது சங்கே
செந்நிலைதந்தானென் ஊதூது சங்கே
சிற்சபையப்பனென் ஊதூது சங்கே

இறவாமையீந்தானென் ஊதூது சங்கே
எண்ணம்பலித்ததென் ஊதூது சங்கே
திறமேயளித்தானென் ஊதூது சங்கே
சிற்றம்பலத்தானென் ஊதூது சங்கே

காவுதவிர்த்தானென் ஊதூது சங்கே
கருணைகிடைத்ததென் ஊதூது சங்கே
இரவுவிடிந்ததென் ஊதூது சங்கே
எண்ணம்பலித்ததென் ஊதூது சங்கே

எல்லாஞ்செய்வல்லானென் ஊதூது சங்கே
எல்லார்க்குநல்லானென் ஊதூது சங்கே
எல்லாமுடையானென் ஊதூது சங்கே
எல்லாமுமானானென் ஊதூது சங்கே

கருணாநிதியனென் றூதூது சங்கே
கடவுளவனேயென் றூதூது சங்கே
அருணாடகத்தானென் றூதூது சங்கே
அம்பலச்சோதியென் றூதூது சங்கே

தன்னிகரில்லானென் றூதூது சங்கே
தலைவனவனேயென் றூதூது சங்கே
பொன்னியல்வண்ணனென் றூதூது சங்கே
பொதுநடஞ்செய்தானென் றூதூது சங்கே

ஆனந்தநாதனென் றூதூது சங்கே
அருளுடையப்பனென் றூதூது சங்கே
தானந்தமில்லானென் றூதூது சங்கே
தத்துவச்சோதியென் றூதூது சங்கே

பொய்விட்டகன்றேனென் றூதூது சங்கே
புண்ணியனானேனென் றூதூது சங்கே
மெய்தொட்டுநின்றேனென் றூதூது சங்கே
மேல்வெளிகண்டேனென் றூதூது சங்கே (கரு)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

மருந்தறியேன்மணியறியேன் மந்திரமொன்றறியேன், மதியறியேன்விதியறியேன் வாழ்க்கைநிலையறியேன், திருவறியேன் திருவருளின்செயலறியேனறந்தான், செய்தறியேன்மனமடங்குந்திறத்தினிலோரிடத்தே, இருந்தறியேன்அறிந்தோரையேத்திடவுமறியேன், எந்தைபிரான்மணிமன்ற மெய்தவறிவேனோ, இருந்ததிசைசொலவறியேனெங்ஙனநான்புகுவேன், யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே. (க)

அகங்காரக்கொடுங்கிழங்கையகழ்ந்தெறியவறியேன், அறிவறிந்தவந்தணர்பாற்செறியுநெறியறியேன், நகங்காணமுறுதவர்போல்நலம்புரிந்துமறியேன், நச்சுமரக்கனிபோலவிச்சைகளிற்றுழன்றேன், மகங்காணும்புலவரெலாம்வந்துதொழநடிக்கும், மணிமன்றந்தனையடையும்வழியுமறிவேனோ, இகங்காணத்திரிகின்றேனெங்ஙனநான்புகுவேன், யார்க்குரைப்பே னென்னசெய்வேனேதுமறிந்திலனே. (உ)

கற்குமுறைகற்றறியேன் கற்பனகற்றறிந்த, கருத்தர்திருக்கூட்டத்திற் களித்திருக்கவறியேன், நிற்குநிலைநின்றறியேன்நின்றாரிநடித்தேன், நெடுங்காமப்பெருங்கடலைநீந்தும்வகையறியேன், சிற்குணமாமணிமன்றி

ற்றிருநடனம்புரியுந், திருவடியென்சென்னிமிசைச்சே ர்க்கவறிவேனோ, இற்குணஞ்செய்துழல்கின்றேனெங் ஙனநான்புகுவேன், யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே. (௩)

தேகமுறுபூதநிலைத்திறஞ்சிறிதுமறியேன், சித்தா ந்தநிலையறியேன்சித்திநிலையறியேன், யோகமுறுநிலைசி றிதுமுணர்ந்தறியேன்சிறியேன், உலகநடை யிடைக்கி டைந்தேயுழைப்பாரிற்கடையேன், ஆகமுறுதிருநீற்றி னொளிவிளங்கவசைந்தே, அம்பலத்தேயாடுகின்றவடி யையறிவேனோ, ஏதவனுபவமறியே னெங்ஙனநான்பு குவேன், யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதும றிந்திலனே. (௪)

வேதாந்தநிலைநாடிவிரைந்துமுயன்றறியேன், மெ ய்வகையுங்கைவகையுஞ்செய்வகையுமறியேன், நாதாந் தத்திருவீதிநடந்திடுதற்கறியேன், நானொன்றறியே னெங்கோனொன்றறியேன், போதாந்தத்திருநாடுபுக வறியேன்ஞான,பூரணகாயமெனும்பொதுவையறியே னோ, ஏதாந்ததியேன்சரிதமெங்ஙனநான்புகுவேன், யா ர்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே.()

கலைமுடிவுகண்டறியேன்காரணமெலாமடக்குங், கதியறியேன்கதியறிந்தகருத்தர்களையறியேன், கொலைபுலைகள்விடுத்தறியேன்கோபமறுத்தறியேன்,கொடுங்காமக்கடல்க்கடக்குங்குறிப்பறியேன்குணமா, மலைமிசைநின்றிடவறியேன்ஞானநடம்புரியு, மணிஎன்றந்தனையடையும்வழியுமறிவேனோ; இலையெனும்பொய்யுலகினுடையெங்ஙனநான்புகுவேன், யார்க்குரைப்பே னென்னசெய்வேனேதுமறிந்திலனே. (௬)

சாதிமதஞ்சமயமெனுஞ் சங்கடம்விட்டறியேன்' சாத்திரச்சேறுடுகின்ற சஞ்சலம்விட்டறியேன், ஆதியந்தநிலையறியாக்கடல்போல்ஆனந்தப்பெரும்போகத் தமர்ந்திடவுமறியேன், நீதிநெறிநடந்தறியேன்சோதிமணிப்பொதுவில்நிருத்தமிடுமொருத்தர்தனிக் கருத்தையறிவேனோ, எதிலர்சாருலகினிடை யெங்ஙனநான்புகுவேன், யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே. (௭)

சாகாததலையறியேன்வேகாதகாலின் தாமறியேன் போகாததண்ணீரையறியேன், ஆகாயநிலையறியேன்மாகாயநிலையும்அறியேன்மெய்யறிந்தடங்குமறிவுறையுமறியேன், மாகாதலுடையபெருந் திருவாளர்வழுத்தும்

மணிமன்றந்தனையடையும்வழியுமறியேனே, ஏகாயவுலகினிடை யெங்ஙனநான்புகுவேன், யார்க்குரைப்பே னென்னசெய்வேனேதுமறிந்திலனே. (அ)

தத்துவமென்மயமாகத்தான்செலுத்தவறியேன், சாகாதகல்விகற்குந்தரஞ்சிறிதுமறியேன், அத்தநிலைசத்தநிலையறியேன்மெய்யறிவை யறியேன்மெய் யறிந்தடங்கு மறிஞரையுமறியேன், சுத்தசிவசன்மார்க்கத் திருப்பொதுவினிடத்தே தூயநடம்புரிகின்ற ஞாயமறிவேனே, எந்துணையுங்குணமறியே னெங்ஙனநான்புகுவேன், யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே. (௯)

வரையபரமார்க்கமொடுபரமார்க்கமறியேன், மரணபயந்தவிர்த்திடு சன்மார்க்கமதையறியேன், திரையறுதண்கடலறியேனக்கடலைக்கடந்தே தெள்ளமுதமுணவறியேன்சினமடக்கவறியேன், உரைபுணர்வுகடந்து திருமணிமன்றந்தனிலே ஒருமைநடம்புரிகின்றார் பெருமையறியேனே, இரையுறுபொய்யுலகினிடை யெங்ஙனநான்புகுவேன்,யார்க்குரைப்பே னென்னசெய்வேனேதுமறிந்திலனே. (௰)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

வானத்தின்மீது மயிலாடக்கண்டேன்
மயில்குயிலாச்சுதடி அக்கச்சி
மயில்குயிலாச்சுதடி (௧)

துள்ளலிட்டுத்தொடங்கினேன்மன்றாடும்
வள்ளலைக்கண்டேனடி அக்கச்சி
வள்ளலைக்கண்டேனடி. (௨)

சாதிச்சமயச்சழக்கைவிட்டேனருட்
சோதியைக்கண்டேனடி அக்கச்சி
சோதியைக்கண்டேனடி

பொய்யையொழித்துப்புறப்பட்டேன்மன்றாடும்
ஐயரைக்கண்டேனடி அக்கச்சி
ஐயரைக்கண்டேனடி. (௪)

முற்றிற்று.